## ஜமாஅத்துடனான தொழுகை

*இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:*

صَلَاةُ الرَّجُلِ فِي جَمَاعَةٍ تَزِيدُ عَلَى صَلَاتِهِ فِي بَيْتِهِ، وَصَلَاتِهِ فِي سُوقِهِ خَمْسًا وَعِشْرِينَ دَرَجَةً، وَذَلِكَ بِأَنَّ أَحَدَكُمْ إِذَا تَوَضَّأَ فَأَحْسَنَ الْوُضُوءَ وَأَتَى الْمَسْجِدَ لَا يُرِيدُ إِلَّا الصَّلَاةَ، وَلَا يَنْهَزُهُ إِلَّا الصَّلَاةُ لَمْ يَخْطُ خُطْوَةً إِلَّا رُفِعَ لَهُ بِهَا دَرَجَةٌ وَحُطَّ عَنْهُ بِهَا خَطِيئَةٌ، حَتَّى يَدْخُلَ الْمَسْجِدَ فَإِذَا دَخَلَ الْمَسْجِدَ كَانَ فِي صَلَاةٍ، مَا كَانَتِ الصَّلَاةُ هِيَ تَحْبِسُهُ، وَالْمَلَائِكَةُ يُصَلُّونَ عَلَى أَحَدِكُمْ مَا دَامَ فِي مَجْلِسِهِ الَّذِي صَلَّى فِيهِ، وَيَقُولُونَ: اللَّهُمَّ اغْفِرْ لَهُ، اللَّهُمَّ ارْحَمْهُ اللَّهُمَّ تُبْ عَلَيْهِ، مَا لَمْ يُؤْذِ فِيهِ أَوْ يُحْدِثْ فِيهِ متفق عليه )

*பொருள்: ஒருவர் ஜமாஅத்துடன் தொழுகை நிறைவேற்றுவது அவர் தன்னுடையவீட்டில் தொழுதுகொள்வதைவிடவும்தன்னுடைய கடை அல்லது சந்தையில் தொழுதுகொள்வதைவிடவும் இருபத்தைந்து மடங்கு அதிகமான சிறப்புக்களையுடையது. இது ஒருவர் நல்ல விதமாக உதூ செய்து கொண்டு, தொழுகைக்கான நிய்யத்துடன் மட்டுமே, தொழுகையைத்தவிர வேறு எந்த நோக்கமும் இல்லாது புறப்பட்டுச் செல்லும்பாது அவர் மஸ்ஜிதுக்குச் சென்றடையும்வரை அவர் எடுத்துவைக்கும் ஒவ்வொரு காலடிக்குப்பதிலாகவும் அவருடைய அந்தஸ்து ஒரு படி உயர்த்தப்படுகிறது, அவருடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. மஸ்ஜிதுக்குள் சென்றுவிட்டபின் அவர் எதுவரை தொழுகையில் ஈடுபட்டுக்கொண்டிருப்பாரோ வானவர்கள் அவருக்காக துஆ செய்கின்றனர். எதுவரை அவர் தொழுகை நிறைவேற்றி அங்கேயே இருப்பாரோ அதுவரை வானவர்கள் அவருக்காக துஆ செய்கின்றனர், அல்லாஹ்வே, இவர்மீது சாந்தி உண்டாகட்டும், அவர்மீது கருணை புரிவாயாக. அவர் எதுவரை அடுத்த தொழுகைக்காக காத்திருப்பாரோ அவர் அந்த நேரம் முழுவதும் தொழுகையிலேயே இருந்ததாகக் கருதப்படும் (புக்ஹாரி, முஸ்லிம்).*

மற்றொரு நபிமொழியில் கூறப்பட்டுள்ளது, தொழுகையை ஜமாஅத்தில் நிறைவேற்றுவது ஒருவர் தனியாகவே நிறைவேற்றும் தொழுகையைவிட 27 மடங்கு சிறந்தது (புக்ஹாரி, முஸ்லிம்).

### ஜமாஅத்துடன் தொழுவதற்கான கட்டளை

ஜமாஅத்துடன் தொழுவது சுன்னத் முஅக்கதஹ்வாகும் (வலியுறுத்தப்பட்டது). இமாமுடன் ஒருவர் மட்டும் இருந்தாலே ஜமாஅத்துடன் தொழுகை நிறைவேற்றலாம், அது ஒரு ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தா

www.uzairfalahi.com

லும், ஒரு சிறுவனாக இருந்தாலும் சரியே, என மார்க்கச் சட்ட அறிஞர்கள் கருதுகின்றனர். இமாம் ஹம்பல் (ரஹ்) அவர்களுடைய கருத்துப்படி ஜமா அத்தில் தொழுகை நிறைவேற்றுவது வாஜிபானது மற்றும் இன்றியமை யாததாகும். இதற்கு ஆதாரமாக அவர்கள் கூறுவது, ஒரு பார்வையற்ற நபித்தோழர் (ர) இறைத்தூதர் ﷺ அவர்களிடம் வந்து கூறினார், இறைத் தூதர் ﷺ அவர்களே, என்னைப் பள்ளிவாசலுக்கு அழைத்துச்சென்று மீண் டும் என்னுடைய வீட்டிற்குத் திரும்பக் கொண்டுவந்து சேர்ப்பவர்கள் யாருமில்லை, ஆகவே, நான் என் வீட்டிலேயே தொழுகை நிறைவேற்றிக் கொள்ளலாமா? அதற்கு இறைத்தூதர் ﷺ அவர்கள் அவருக்கு விதிவிலக்கு அளித்துக் கூறினார்கள், அவ்வாறே செய்துகொள்ளுங்கள். அவர் திரும்பிச் சென்றுகொண்டிருந்தபோது இறைத்தூதர் ﷺ அவர்கள் அவர்களைத் திரும்ப அழைத்துக்கேட்டார்கள், நீங்கள் பாங்கு சொல்லப்படுவதைக் கேட்கின்றீர் களா, அவர் கூறினார், ஆம், நான் கேட்கிறேன். அதன்பின் இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், அப்படியானால் நீங்கள் பள்ளிவாசலுக்கு வர வேண்டும் (முஸ்லிம்). ஒரு நபிமொழியில் இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள், ஒரு ஊரில் அல்லது கிராமத்தில் மூன்று முஸ்லிம்கள் இருந் தால், அங்கு ஜமாஅத்துடன் தொழுகை நிறைவேற்றப்படவில்லையா னால் அவர்கள்மீது ஷைத்தான் ஆதிக்கம் கொண்டுள்ளான் என்று பொரு ளாகும். ஆகவே, நீங்கள் ஜமாஅத்துடன் தொழுகை நிறைவேற்றுவதைப் பேணுதலுடன் கடைபிடியுங்கள். பிரிந்து செல்லும் ஆட்டைத்தான் ஓநாய் கொன்று தின்னும் (அபூ தாவூத், நசாயி).

## ஜமாஅத் தொழுகைக்காகச் செல்லும்போது செய்யவேண்டிய செயல்கள்

1 **தொழுகைக்கான அழைப்புக்குக் குரல் கொடுத்து முற்படும் மனநிலை** ஜமா அத் தொழுகை விடவோ அல்லது தாமதிக்கவோ கூடாது என்றும் முதல் ஸஃப்பில் (வரிசை) இடம் பெறவேண்டும் என்றும் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும். இறைத்தூதர் ﷺ அவர்கள்கூறுகிறார்கள்

**لَوْ يَعْلَمُ النَّاسُ مَا فِي الْأَذَانِ وَالصَّفِّ الاَوَّلِ، ثُمَّ لَمْ يَجِدُوا إِلا أَنْ يَسْتَهِمُوا عَلَيْهِ لاسْتَهَمُوا عَلَيْهِ** البخاري)

*பொருள்: மக்கள் அதான் (பாங்கு) சொல்வதிலும் முதல் ஸஃப்பில் தொழுவதிலும் என்ன பலன் இருக்கின்றது என்று தெரிந்துகொள் வார்களேயானால், அதனைப் பெறுவதற்காக சீட்டுக் குலுக்கி மட் டுமே அடையமுடியும் என்றாலும் அதற்காக சீட்டுக் குலுக்கிப் போட் டும் அதனை அடைய முயலுவார்கள்* (புக்ஹாரி).

www.uzairfalahi.com

2 **வீட்டிலிருந்து தொழுகைக்காக மஸ்ஜிதுக்குப் புறப்பட்டுச் செல்லும்போது கண்ணியமாகவும் மன உறுதியுடனும் செல்லவேண்டும்** இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

إِذَا سَمِعْتُمُ الإِقَامَةَ، فَامْشُوا إِلَى الصَّلاَةِ وَعَلَيْكُمْ بِالسَّكِينَةِ وَالوَقَارِ، وَلاَ تُسْرِعُوا، فَمَا أَدْرَكْتُمْ فَصَلُّوا، وَمَا فَاتَكُمْ فَأَتِمُّو ( متفق عليه

*பொருள்: நீங்கள் மஸ்ஜிதுக்குப் புறப்பட்டுச் செல்லும்போது கண்ணியத்துடனும் கம்பீரத்துடனும் செல்லவேண்டும், ஜமாஅத் கிடைக்க வேண்டும் என்று அவசரப்பட்டு ஓடவும்கூடாது, எவ்வளவு தொழுகை கிடைக்கின்றதோ அதனைத் தொழுது மீதியுள்ள தொழுகையை பூர்த்தி செய்துகொள்ளுங்கள்.* (புக்ஹாரி, முஸ்லிம்).

3 **எந்த பள்ளிவாசலில் தொழுகையில் பெரிய ஜமாஅத் உள்ளதோ அங்கேயே தொழவேண்டும், அது தூரமாக இருந்தாலும் சரியே** இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

صَلاَةُ الجَمَاعَةِ تَفْضُلُ عَلَى صَلاَةِ الرَّجُلِ وَحْدَهُ، بِسَبْعٍ وَعِشْرِينَ دَرَجَةً متفق عليه )

*பொருள்: ஜமாஅத்தில் நிறைவேற்றப்படும் தொழுகை ஒருவர் தனியாக நிறைவேற்றும் தொழுகையைவிட இருபத்தேழு மடங்கு அதிகமான சிறப்பினைப் பெறும்* (புக்ஹாரி, முஸ்லிம்).

www.uzairfalahi.com

**ஜமாஅத் மற்றும் ஜும்ஆ தொழுகையில் கலந்துகொள்ளாமலிருப்பதற்குத் தகுதியான காரணங்கள்**

1 **ஜமாஅத்தில் கலந்து கொள்வதற்கு இயலாத நிலையிலான கடுமையான வியாதி அல்லது அவ்வாறு செய்வது மிகக் கடினமானதாக இருத்தல்** இறைத்தூதர் ﷺ அவர்கள் நோய்வாய்ப்பட்டு இருந்த காலக்கட்டத்தில் ஹஜ்ரத் அபூ பக்ர் (ர) அவர்களை இமாமத்து செய்யுமாறு பணித்தார்கள் (புக்ஹாரி, முஸ்லிம்).

2 **மழை பெய்துகொண்டிருத்தல், வழியில் சேறு அதிகமாக இருத்தல், கடுமையான குளிர் அல்லது புயற்காற்று வீசிக்கொண்டிருத்தல், கடுமையான வெயில் காய்தல் அல்லது வெளியில் மிகவும் இருளாக இருத்தல்** இறைத்தூதர் ﷺ அவர்கள் நபித்தோழர்களுடன் பயணத்தில் இருக்கும்போது இரவில் மிகவும் இருள் பரவியிருந்தாலோ அல்லது மழை பெய்துகொண்டிருந்தாலோ அனைவரும் தத்தம் கூடாரங்களிலேயே தொழுகை நிறைவேற்றிக்கொள்ளுமாறு அறிவிப்பு செய்யப்படும் (புக்ஹாரி, முஸ்லிம்).

3 **உயிர், பொருள் அல்லது மானபங்கத்திற்கான அச்சம் ஏற்பட்டிருக்கும் நிலையில்** *இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:*

مَنْ سَمِعَ النِّدَاءَ فَلَمْ يَأْتِهِ، فَلَا صَلَاةَ لَهُ، إِلَّا مِنْ عُذْرٍ  ابن ماجه ، ابن حبان )

*பொருள்: எவர் தொழுகைக்கான அழைப்பினைக் கேட்பார்களோ அவர்கள் தொழுகைக்கு வரவேண்டும், ஏதும் முறையான காரணம் இருந்தால்தவிர (இப்னு மாஜா, இப்னு ஹிப்பான்)*

4 **எவரும் வெங்காயம் அல்லது பூண்டு அல்லது இதனைப்போன்று ஏதும் பச்சையாகவே சாப்பிட்டு வாயில் துர்நாற்றம் இருக்குமானால் அது நீங்கி விடும் வரை பள்ளிவாசலுக்குள் பிரவேசிக்கக்கூடாது** *இறைத்தூதர் ﷺ அவர் கள் கூறுகிறார்கள்:*

مَنْ أَكَلَ ثُومًا أَوْ بَصَلًا فَلْيَعْتَزِلْنَا، أَوْ لِيَعْتَزِلْ مَسْجِدَنَا، وَلْيَقْعُدْ فِي بَيْتِهِ  متفق عليه )

*பொருள்: எவர் ஒருவர் பச்சையாக வெங்காயம் அல்லது பூண்டு சாப்பிட்டாரோ அவர் பள்ளிவாசலுக்குள் செல்லவேண்டாம், அவர் வீட்டிலேயே இருக்கட்டும் (புக்ஹாரி, முஸ்லிம்).*

5 **ஓரிடத்தில் கைதுசெய்யப்பட்டுள்ள ஒருவர்** *அல்லாஹ் தஆலா கூறுகிறான்*

لَا يُكَلِّفُ ٱللَّهُ نَفْسًا إِلَّا وُسْعَهَا ۚ ﴿٢٨٦﴾ البقر 86؟ )

*பொருள்: அல்லாஹ் எந்த மனிதரையும் அவரது சக்திக்கு அதிகமாக (பொறுப்புகளைச்சுமத்தி)சிரமப்படுத்துவதில்லை(அல் பஃகரஹ்:286)*

6 **ஒருவருக்கு மல ஜலம் கழிக்கும் தேவை இருத்தல் அல்லது உணவு பரிமாறப்பட்டிருத்தல்** *ஹஜ்ரத் ஆயிஷா (ர) அவர்கள் இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறியதாக அறிவிக்கிறார்கள்:*

لَا صَلَاةَ بِحَضْرَةِ الطَّعَامِ، وَلَا هُوَ يُدَافِعُهُ الْأَخْبَثَانِ  أحمد، مسلم، أبو داؤ )

*பொருள்: உணவு பரிமாறப்பட்டிருந்தாலோ அல்லது எவருக்கும் மல ஜலம் கழிக்கும் தேவை இருந்தாலோ அவர்கள் தொழுகையில் ஈடுபடக்கூடாது (அஹ்மத், முஸ்லிம், அபூ தாவூத்)*

* * *

www.uzairfalahi.com